# இந்தியா முழுவதும் தனது வினியோகச் சங்கிலியை விரிவாக்கம் செய்து பாரதத்திற்கு விழாக்கால உற்சாகத்தை வழங்கும் ஃபிளிப்கார்ட்

- *3,000 க்கும் மேற்பட்ட அமைவிடங்களுடன் அடுக்கு - 3 நகரங்களிலும் அதற்கு அப்பாலும் தனது கடைசி மைல் அடைதலை விரிவுபடுத்தி, இருத்தலை வலுப்படுத்தியுள்ளது*
- *உள்கட்டமைப்பு விரிவாக்கம் புதிய வாழ்வாதார வாய்ப்புகளை வழங்கி, MSMEsகள், விற்பனையாளர்கள் மற்றும் கைவினைஞர்களை சந்தைக்கு மேலும் நெருக்கமாக்க உதவும்*

**பெங்களூரு - அக்டோபர் 08, 2020:** ஆன்லைனுக்கு வரும் மில்லியன் கணக்கான புதிய மற்றும் தற்போதுள்ள நுகர்வோரின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் மற்றும் லட்சக்கணக்கான MSMEகள், விற்பனையாளர்கள் மற்றும் கைவினைஞர்களின் சந்தை அணுகுவசதியை மேம்படுத்தும் வகையிலும், இந்தியாவின் உள்நாட்டு இ-காமர்ஸ் சந்தையான பிளிப்கார்ட், நாடு முழுவதும் அதன் விநியோகச் சங்கிலியை கணிசமாக விரிவாக்கியுள்ளது. இந்த பெரிய அளவிலான உள்கட்டமைப்பு முதலீடு, விழாக்காலம் மற்றும் BBD (பிக் பில்லியன் டேஸை) விழாக்கால நிகழ்வின் போது  பாரத நுகர்வோரின் வீட்டு வாசலில் பண்டிகை உற்சாகத்தை கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது இந்த செயல்முறையின் ஒரு பகுதியாக, இந்த விழாக்காலத்தில் நுகர்வோருக்கு விரைவான மற்றும் ஆற்றல் மிக்க மின்-வர்த்தக அனுபவத்தை வழங்குவதற்காக நாடு முழுவதும் 3,000 க்கும் மேற்பட்ட அமைவிடங்களுடன்,  தனது கடைசி மைல் தூரத்தை அதிகரித்துள்ளது. இந்த விரிவாக்கம் சிறிய நகரங்களைச் சேர்ந்த லட்சக்கணக்கான விற்பனையாளர்கள், MSMEகள் மற்றும் கைவினைஞர்களுக்கு ஃபிளிப்கார்ட்டின் விநியோகச் சங்கிலி மூலம் இந்தியா முழுவதும் பரவியுள்ள நுகர்வோர் தளத்துடன் இணைய உதவும்.

ஒட்டுமொத்தமாக, ஃபிளிப்கார்ட் அதன் விநியோகச் சங்கிலி சொத்துக்களில் 3.4 மில்லியன் சதுர அடிக்கு மேற்பட்ட இடவசதியை நாடு முழுவதும் ஈடேற்றல் மையங்கள், தாய் மையங்கள் மற்றும் விநியோக மையங்கள் உட்பட உருவாக்கியுள்ளது. விற்பனையாளர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் இடையில் பொருட்களின் தடையற்ற இயக்கத்தை உறுதி செய்வதற்கு தலா 5 லட்சம் சதுர அடிகள் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள பெரிய அளவிலான ஈடேற்றல் மையங்கள் முக்கியப் பங்கினை வகிக்கும். இந்த ஈடேற்றல் மையங்கள் தாய் மையங்கள் அல்லது வரிசைப்படுத்தல் மையங்கள் மற்றும் விநியோக மையங்களுடன் நாடு முழுவதும் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை பெருமளவில் உருவாக்குவதில் பங்களிப்புகளை வழங்குகின்றன. இச்சேர்ப்புடன், பிளிப்கார்ட்டுக்கான மொத்த கிடங்கு அமைவிடப்பரப்பு இப்போது 18 மில்லியன் சதுர அடிக்கு மேல் உள்ளது, கூடுதலாக கூட்டாளர் பிராண்டுகளின் லட்சம் சதுர அடிகளும் உள்ளன. பண்டிகை காலங்களில் அதிக எண்ணிக்கையிலான ஷிப்மெண்ட்களை நிர்வகிக்க உதவும் வகையில், நாடு முழுவதும் 50,000 க்கும் மேற்பட்ட கிரானாக்களின் ஆன்போர்டிங் மேற்கொள்ளப்பட்டுள்ளதன்  மூலம் இது மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

**ஃபிளிப்கார்ட்டின், ஈகார்ட் மற்றும் மார்கெட்பிளேஸ், மூத்த துணைத் தலைவர் அமிதேஷ் ஜா** அவர்கள், “மின்-வர்த்தகத்தின் நன்மைகளை சமமாக விநியோகிப்பதை உறுதி செய்வதற்காக வாடிக்கையாளர்களை ஆன்லைனுக்கு கொண்டுவருவதில் ஃபிளிப்கார்ட் எப்போதும் உறுதிபூண்டுள்ளது. மின்-வர்த்தகச் சேவைகளுக்கான வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, நாடு முழுவதும், குறிப்பாக சிறிய நகரங்களில், எங்கள் விநியோகச் சங்கிலியின் விரிவாக்கத்தை இந்த தொற்றுநோய் துரிதப்படுத்தியுள்ளது. மேலும், அடுத்த சில ஆண்டுகளில் மின்-வர்த்தகத்தின் வளர்ச்சியை மனதில் கொண்டு, இந்த விரிவாக்கம் நாடு முழுவதும் உள்ள மில்லியன் கணக்கான நுகர்வோரை லட்சக்கணக்கான விற்பனையாளர்கள் மற்றும் கைவினைஞர்களுடன் விரைவாகவும் ஆற்றல்மிக்க வகையிலும் இணைக்க உதவும். பண்டிகை காலங்களில், இந்த கூடுதல் இடவசதி மற்றும் உள்கட்டமைப்பு முதலீடு உள்ளூர் வேலைவாய்ப்பை உயர்த்தும், குறிப்பாக ஊரடங்கு காரணமாக தங்கள் சொந்த ஊர்களுக்குச் சென்ற மக்களுக்கு, உள்ளூர் வணிகங்களுக்கு ஃபிளிப்கார்ட்டுடன் தங்கள் செயல்பாடுகளை கணிசமாக உயர்த்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்கும்” என்று கூறினார்.

மின்-வர்த்தகத்தின் மதிப்பு மற்றும் வசதியை அனுபவிக்க ஆன்லைனுக்கு சிறிய நகரங்களிலிருந்து வரும் மில்லியன் கணக்கான புதிய நுகர்வோருக்கு சேவை வழங்க இந்த விநியோக வலையமைப்பு விரிவாக்கம் மிகவும் முக்கியமாகும். ஆயிரக்கணக்கான உள்ளூர் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் அதே வேளையில், பெருநகரங்கள் மற்றும் அடுக்கு II, III நகரங்கள் மற்றும் லடாக், பிஷ்ணுபூர் (மணிப்பூர்) மற்றும் திமாபூர் (நாகாலாந்து) போன்ற தூரப்பிரதேசங்களிலும், ஃபிளிப்கார்ட்டின் இருப்பை வலுப்படுத்த இது உதவுகிறது. இந்த பண்டிகைக் காலங்களில், ஃபிளிப்கார்ட் கிட்டத்தட்ட 70,000 நேரடி வேலைகளையும், லட்சக்கணக்கான மறைமுக வேலைகளையும் தனது பான்-இந்தியா விநியோக சங்கிலி மூலம் உருவாக்கி வருகிறது.

COVID-19 தொற்றுநோய் நுகர்வோர் வாங்குதல் முறைகளில் தலைகீழ் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது மற்றும் விற்பனையாளர்கள் தங்கள் வாழ்க்கையில் மின் வணிகத்தில் மேம்பட்ட பங்கைக் காணும் தயாரிப்பு வகைகளில் ஆன்லைன் தளங்களுக்கு மாறுவதை துரிதப்படுத்தியுள்ளது. மளிகைப் பொருட்கள், அழகுப் பொருட்கள், WFH ஃபர்னிச்சர்கள் முதல் வீட்டு உபகரணங்கள் வரை அத்தியாவசியமான பொருட்கள், நாடு முழுவதும் உள்ள நுகர்வோர் மற்றும் விற்பனையாளர்களுக்கு மின்-வர்த்தகத்தின் விருப்பமான தேர்வாகியுள்ளது. தொற்றுநோய்க்கு முன்னர் இந்த போக்கின் பெரும்பகுதியை பெருநகரங்கள் கொண்டிருந்தாலும், தொற்றுநோய் நுகர்வோர் மற்றும் விற்பனையாளர்களை அடுக்கு -2 மற்றும் அடுக்கு -3 சந்தைகளில் இருந்து மின் வணிகத்திற்கு மாறுவதை துரிதப்படுத்தியுள்ளது. பண்டிகை காலத்திற்கு முன்னதாக இந்த பிராந்தியங்களில் ஃபிளிப்கார்ட்டின் விநியோகச் சங்கிலி விரிவாக்கம் நுகர்வோர், விற்பனையாளர்கள், கைவினைஞர்கள் மற்றும் பிற சுற்றுச்சூழல் பங்காளிகளுக்கு ஒரு இருதரப்பு வெற்றிக்கான சூழ்நிலையை உருவாக்கும்.

வினியோகச் சங்கிலியின் விரிவாக்கம் ஃபிளிப்கார்ட் வரவிருக்கும் பண்டிகை காலம் மற்றும் பிக் பில்லியன் நாட்களுடன் உருவாக்கும் பெரிய அளவிலான வேலைவாய்ப்புடன் ஒத்துப்போகிறது. ஃபிளிப்கார்ட்டின்

விநியோகச் சங்கிலி முழுவதும் பெண்களின் பரந்த பங்களிப்புடன் மின்-வர்த்தகத்தை மேலும் உள்ளடக்கியதாக மாற்றவும் இது பங்களிக்கிறது.

**ஃபிளிப்கார்ட் குழுமம் குறித்து**

இந்தியாவின் முன்னணி டிஜிட்டல் வர்த்தகக் குழுமமாகத் திகழும் ஃபிளிப்கார்ட் குழுமம், ஃபிளிப்கார்ட், மிந்த்ரா, ஜபாங் மற்றும் ஃபோன்பே ஆகிய குழும நிறுவனங்களை உள்ளடக்கியதாகும். 2007 – ம் ஆண்டு, பல மில்லியன் நுகர்வோர்கள், விற்பனையாளர்கள், வணிகர்கள் மற்றும் சிறு வர்த்தகத்தினர் இந்தியாவின் மின்-வர்த்தகப் புரட்சியின் ஒரு பகுதியாகத் திகழ்வதை ஏதுவாக்கியுள்ளது. 250 மில்லியனுக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர் அடித்தளத்துடன், 150 மில்லியனுக்கும் மேற்பட்ட தயாரிப்புகளை 80 – க்கும் மேற்பட்ட வகையினங்களில் ஃபிளிப்கார்ட் வழங்கி வருகிறது. இந்தியாவில், மின்-வர்த்தகத்தை ஜனநாயகப்படுத்தும் எங்களது முயற்சிகள், அணுகுத்தன்மை மற்றும் கட்டுப்படியாகக் கூடிய தன்மையை மேம்படுத்துகிறது, வாடிக்கையாளர்களை மகிழ்விக்கிறது மற்றும் சூழலமைப்பில் பல லட்சம் பணிகளை உருவாக்குகிறது மற்றும் பல துலைமுறை தொழில்முனைவோர்களுக்கு திறனளிக்கிறது மற்றும் MSME-க்கள், புத்தாக்கத்தை முன்னின்று நடத்தி, பல தொழில்துறை முதல் அம்சங்களை சாத்தியமாக்குவதை ஏதுவாக்கிவருகிறது. ஃபிளிப்கார்ட் ஹோல்சேல் என்னும் எங்கள் புதிய டிஜிட்டல் சந்தையிடத்தின் சமீபத்திய அறிமுகம், இந்தியாவிலுள்ள கிராணாக்கள் மற்றும் MSME-க்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கான எங்களது உறுதிப்பாட்டிற்கான ஒரு சான்றாதாரமாகும். கேஷ் ஆன் டெலிவரி, நோ காஸ்ட் EMI மற்றும் ஈசி ரிட்டர்ன்ஸ் போன்ற பல்வேறு வாடிக்கையாளரை-மையமாகக் கொண்ட புத்தாக்கங்களின் வழியாக ஆன்லைன் ஷாப்பிங்கை அதிகம் அணுகத்தக்கதாகவும் மற்றம் கட்டுப்படியாகக்கூடியதாகவும் பல மில்லியன் இந்தியர்களுக்கு இந்நிறுவனம் மாற்றுகிறது. ஆன்லைன் ஃபேஷன் சந்தையில் மிந்தரா மற்றும் ஜபாங், இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் பேமெண்ட்கள் அடித்தளம் ஃபோன்பே ஆகியவற்றின் வழியாக, இந்திய வர்த்தகத்தின் மாற்றத்தினை தொழில்நுட்பத்தின் வழியாக வழிநடத்திவருகிறது.

**மேலதிக தகவல்களுக்கு, தொடர்பு கொள்ளவும்** *media@flipkart.com*